©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 27, 2016
சித்திரை 14, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

2014 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:—

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/2014.**

**2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்குமானதோர் அவசரச் சட்டம்.**

மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கிறார்.

1. (1) இந்த அவசரச் சட்டம், 2014 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் (திருத்த) அவசரச் சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 20/2013. 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (அ) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(அ) பதிவாளர் பதவியை வகிப்பவர் பல்கலைக்கழகம் எதனின் ஒரு பேராசிரியர் படிநிலைக்குக் குறையாத ஒரு கலைக்கழக உறுப்பினராக இருத்தல் வேண்டும் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட தகுதிப்பாடுகளைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்;"

3. முதன்மைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், "ஓர் ஆண்டு" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "இரண்டு ஆண்டுகள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 55 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 56 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், "ஓர் ஆண்டு" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "இரண்டு ஆண்டுகள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 56 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2014 ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள்.

**கோ. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

## விளக்கவுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு, 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நிர்வாகி ஒருவர், துணை வேந்தரின் செயற்பணிகளை ஆற்றுவதற்காக, மேற்சொன்ன 55 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, ஆளுகையர் ஓர் ஆண்டு காலஅளவு ஒன்றுக்கு மட்டுமே பதவி வகிக்க முடியும் என்பதால், 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ஆம் நாளிலிருந்து ஓர் ஆண்டு காலஅளவுக்கு அல்லது தேவை இல்லாமல்போகும் வரையில், சிலவற்றில் எது முந்தியதோ அதுவரை பதவியமர்த்தம் செய்யப்பட்டிருந்தார். முறைப்படி துணைவேந்தரைப் பதவியமர்த்துவதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும் என்பதால் நிர்வாகியின் பதவிக் காலஅளவினை மேலும் ஓர் ஆண்டு காலஅளவுக்கு அல்லது தேவை இல்லாமல் போகும் வரை, இவற்றில் எது முந்தியதோ அது வரையில் நீட்டிப்பதென அரசு முடிவு செய்திருக்கிறது.

2. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், மேற்சொன்ன சட்டத்தின் 56 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பதிவாளரின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் மற்றும் செயற்பணிகளை ஆற்றுவதற்கும், மேற்சொன்ன சட்டத்தின் 56 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி ஆளுகையர் ஓர் ஆண்டு காலஅளவுக்கு மட்டுமே பதவி வகிக்க முடியும் என்பதால், 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ஆம் நாளிலிருந்து ஓர் ஆண்டுக் காலஅளவுக்கு அல்லது தேவையில்லாமல் போகும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில் பதவியமர்த்தம் செய்யப்பட்டிருந்தார். மேற்சொன்ன சட்டத்தின் 11ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி, பதிவாளர் பதவி வகிப்பவர், பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர் படிநிலைக்குக் குறையாத ஒரு கலைக்கழக உறுப்பினராக இருத்தல் வேண்டும். தற்போது, பதிவாளர் பதவியை, பல்கலைக்கழக மானியக் குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட தகுதிப்பாடுகளைக் கொண்டுள்ள, பல்கலைக்கழகம் எதனின் தகுதிப்பாடுள்ள பேராசிரியர்களிடையேயிருந்து நேரடி நியமனம் மூலமாக நிரப்புவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முறைப்படி பதிவாளரைப் பதவியமர்த்தம் செய்வதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும் என்பதால் மேற்சொன்ன 56 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பதவியமர்த்தம் செய்யப்பட்ட பதிவாளரின் பதவிக் காலஅளவினை மேலும் ஓர் ஆண்டு காலஅளவுக்கு அல்லது தேவை இல்லாமல் போகும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அது வரையில் நீட்டிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

3. அதன்படி, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 20/2013 இன் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறினை, 55 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மற்றும் 56 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்திருக்கிறது.

4. இந்த அவசரச் சட்டமானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.